DM Court Kunnam

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**<u>அசல் வழக்கு எண். 244/2021</u>**

2024- ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08- ஆம் நாள் வெள்ளிக் கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW2 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. A.சாகிதாபானு, தலைமை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கராசு | தொழில் | : | துணை வட்டாட்சியர், குன்னம். |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | கருப்பழகி | வட்டம் | : | |
| கிராமம் | : | பள்ளிநத்தம், முசிறி வட்டம் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 54/2024 |

**<u>பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை</u>** :-

1) நான் நீதிமன்றத்தில் இருந்து தாசில்தாருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. அவர் இன்றைய தினம் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெறவுள்ள ஆய்வு கூட்டத்தில் பங்கேற்க சென்றுவிட்டதால், அவர் சார்பாக எழுத்துமூலமான உத்தரவின் பேரில் நீதிமன்றத்திற்கு ஆவணங்களுடன் அவர் சார்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சர்வே எண். 207/11 -க்கான 'அ' பதிவேடு **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சர்வே எண். 207/11-ன் விஸ்தீர்ணம் 7 1/2 ஏர்ஸ் ஆகும். அது மு.கோவிந்தசாமி என்பவருடைய பெயரில் உள்ளது. அதன் பட்டா எண். 281 ஆகும்.

2) இதுநாள் வரை மேற்படி சர்வே எண். 207/11 மு.கோவிந்தசாமி பெயரில் தான் இருந்து வருகிறது.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) தாவா நிலத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்திருக்கிறேன். எப்போது பார்த்தேன் என்றால் 21.10.2024 ஆம் தேதியன்று பார்வையிட்டேன். அதனை சுற்றியுள்ள நிலங்கள் யார் யார் பெயரில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி தாவா சொத்தை ராஜேந்திரன் என்பவரின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும், நாங்கள் அவரது பெயரை தவறாக வருவாய் துறை ஆவணங்களில் ஏற்படுத்திவிட்டு, தாவா சொத்து அவருடைய அனுபவத்தில் இருப்பதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2) தாவா சொத்தை நான் பார்வையிடாமல் கோவிந்தசாமிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது வரை தாவா சொத்து ராஜேந்திரன் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMI cum JM Court, Kunnam